முன்னிலை: திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப.,
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

செயல்முறை ஆணை எண் 24847/டி3/2020, நாள் 23.02.2021

பொருள்: நிர்வாகம் - தொழில்நுட்பக் கல்வித் துறை - அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை — (லேட்) திரு.மா.சுந்தர்ராஜ், ஆர்டிசான்-2 என்பவரின் வாரிசுதாரர்(மகன்) திரு.சு.மகந்திரன், என்பவருக்கு பெருந்துறை, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கியது — பணிவரன்முறைப்படுத்தி அரசாணை வழங்கப்பட்டது - பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல்.

பார்வை: அரசாணை (3ப) எண்.2 உயர்கல்வித் (சி2) துறை, நாள் 5.02.2021

----------

பார்வையில் காணும் அரசாணையில், பெருந்துறை, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு, இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.சு.மகந்திரன், என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 27.08.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை இணைக்கப்படுகிறது)

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப்பிரிவு 28 (1)-ன்கீழ், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 27.08.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

தனியர், பணியில் சேர்ந்த நாள் முதல், மூன்றாண்டு பணிகாலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். மேலும், தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.

இணைப்பு: பார்வையில் காணும் அரசாணை

ஒம்/- கே.விவேகானந்தன்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

பெறுநர்
திரு.சு.மகந்திரன்,
இளநிலை உதவியாளர்,
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
பெருந்துறை (முதல்வர் வழியாக)

நகல் :

1. முதல்வர்,
   அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
   பெருந்துறை
2. முதல்வர்,
   அரசினர் பொறியியற் கல்லூரி,
   கோவை

தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

3. டி3/ தொகுப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23/2/2021

உதவி இயக்குநர் (நிர்வாகம்)

23/2/2021

சுருக்கம்

பொதுப்பணிகள் – உயர்கல்வி – தொழில்நுட்பக் கல்வி – கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் ஆர்டிசான்-2 ஆக பணியாற்றிய திரு.மா.சுந்தர்ராஜ், என்பவரின் வாரிசுதாரர் திரு.சு.மகேந்திரன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (சி2) துறை

அரசாணை (3 ப) எண்.2

நாள்: 5.2.2021
சார்வரி, தை – 23
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள் 23.01.2020.
2. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண்.24847/டி3/2020, நாள் 14.10.2020.

------

ஆணை:–

மேலே இரண்டில் படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வி துறையைச் சார்ந்த கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் ஆர்டிசான்-2 ஆக பணியாற்றிய திரு.மா.சுந்தர்ராஜ், என்பவர் பணியிலிருக்கும் போது 14.02.2011 அன்று பணியிடை மரணமடைந்து விட்டதால், அவரது மகன் திரு.சு.மகேந்திரன், என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 11.02.2013 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், அதனைத் தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் குறித்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையால் வெளியிடப்பட்ட அரசாணையின்படி அவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது. இவர் பத்தாம் வகுப்பு பள்ளியிறுதிப் பொதுத் தேர்வில் மார்ச் 1999-ல் தேர்ச்சி பெற்றுள்ளார். அன்னாரின் பிறந்த தேதி 09.02.1981. திரு.சு.மகேந்திரன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கான கல்வித் தகுதி, வயது மற்றும் 3 ஆண்டுகளில் விண்ணப்பம் அளித்தல் ஆகிய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி நியமனம் செய்து, தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.9462/டி3/2013, நாள்.22.08.2019–இல் ஆணை வழங்கப்பட்டு திரு.சு.மகேந்திரன், பெருந்துறை, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் 27.08.2019 முற்பகல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் எனவும், இளநிலை உதவியாளர் பதவி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வரம்பிற்குட்பட்டதால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம்

..2..

செய்யப்பட்ட திரு.சு.மகேந்திரன், என்பவரின் பணியினை, தனியர் பணியில் சேர்ந்த நாளான 27.08.2019 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி தக்க அரசாணை வழங்கும்படி தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்கண்ட தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கருத்துருவானது அரசால் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி நன்கு ஆய்வு செய்யப்பட்டு, அதனையேற்று, பெருந்துறை, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் திரு.சு.மகேந்திரன், என்பவருக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணியில் சேர்ந்த நாளான 27.08.2019 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதும் இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதி உடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண்.741/ட்டி1/2021, நாள் 29.1.2021 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (ஜி1) துறையின் அ.சா.எண்.2890/ஜி1/2021, நாள் 3.2.2021–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
திரு.சு.மகேந்திரன், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, பெருந்துறை
(தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக)
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை–25.
முதல்வர், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, பெருந்துறை
(தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக)

நகல்
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (ட்டி1) துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (ஜி1) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், உயர்கல்வித்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்